26.08.2025

OS No: 53/2021

பி.வா.சா. 1 திரு. செல்வக்குமார் த/பெ. கணேசன்

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது தகப்பனார் 40 வருடங்களுக்கு முன்பு கும்பகோணம் சென்று மளிகை கடை வைத்து வசித்து வந்தார் என்றால் இல்லை. எனது அப்பா அம்மாவிற்கு வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை, ரேசன் கார்டு ஆகியவை கும்பகோணத்தில் உள்ள முகவரியில் உள்ளன என்றால் சரியல்ல. எனது அப்பா அம்மாவிற்கு மேற்சொன்ன ஆவணங்களில் எந்த முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கீழப்பட்டி ஊரின் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நான் குறிப்பிடும் கீழப்பட்டி முகவரிக்கான கதவு எண். 3/721Aஎன்றால் சரிதான். கீழப்பட்டி கதவு எண். 3/721A என்ற முகவரியில் தான் எனது அப்பா அம்மாவிற்கு ஆதார் அடையாள அட்டை, ரேசன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை உள்ளன என்பதை காட்டிட மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியும். என் அப்பா பிழைப்பு நடத்துவதற்காக குடும்பத்தை விட்டு வெளியில் சென்றதாக எனது எதிர் எழக்குரையில் சொல்லும் சங்கதியில் எந்த வருடம் எனது அப்பா அவ்வாறு வெளியில் சென்றார் என்றால் நான் சிறுவயதில் இருந்த போது சென்றார் வருடம் தெரியவில்லை. எனது அப்பா வெளியூர் சென்று வேலை பார்த்து விட்டு அவ்வப்போது ஊருக்கு வருவார் என சொல்வதில் எத்தனை வருடங்களாக அவ்வாறு வேலை பார்த்து வந்தார் என்றால் எனது அப்பாவிற்கு 16 வயது ஆனதில் இருந்து 50 வயது வரையிலான காலகட்டம் வரை அவ்வாறு வேலை பார்த்தார். எனது அப்பா 1985 ம் வருடத்தில் இருந்து கும்பகோணம் சென்று மளிகை கடை வைத்து அங்கு தான் தற்சமயம் வரை வசித்து வருகிறார் என்றும் வழக்கிற்காக இல்லை என நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா,ஆ1 ஆவணத்திற்கு என்ன பெயர் என்றால் FM10 ஆகும். பி.வா.சா.ஆ.1 என்ன காரணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து எனது அப்பா பெயரில் இருக்கிறது என்பதற்கான மூல ஆவணம் என்பதை காட்ட தாக்கல் செய்துள்ளேன்.

பி.வா.சா.ஆ.1ல் சர்வே எண். 238/10 லிருந்து சர்வே எண். 238/18 வரை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சர்வே எண். 238/10ற்கு பட்டா எண் ஓட்டு வீடு என்ற குறிப்பும், மனை வரி விதிக்கவும் என்ற உத்தரவு குறிப்பும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரமானது சர்வே எண். 238/11, 12. 13. 14. 15. வரையிலான சொத்துக்களுக்கும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்ட தாவா சொத்தான சர்வே எண். 238/18 ற்கு பட்டா எண்ணோ மனை வரி விதிக்க வேண்டும் என்ற உத்தரவு குறிப்போ இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பட்டா எண்ணோ மனை வரி விதிப்பிற்கான விவரமோ குறிப்பிடாததால் தாவா சொத்திற்கு எனது அப்பா பெயரில் பட்டா இல்லை என்றும் மனை வரி விதிப்பு எதுவும் இல்லை என்றும் எடுத்துகாட்டுவதாக மேற்படி ஆவணம் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் எந்த வருடம் தயார் செய்யப்பட்டது என்றால் 1975 வருடத்திற்கு பிறகு தயார் செய்யப்பட்டதாகும். பி.வா.சா.ஆ.1 ல் தயார் செய்யப்பட்ட தேதி என்பது 29.10.1988 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1975 ம் வருடத்தில் இருந்து தற்போது வரை தாவா சொத்தில் எனது அப்பாவின் அனுபவத்தை காட்டி எனது அப்பா பெயருக்கு எந்த எண்ணில் பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் மேற்படி சொத்து நத்தம் என்பதால் பட்டா ஏற்படவில்லை. மேற்படி காலகட்டத்தில் தாவா சொத்திற்கு எனது அப்பா பெயரில் பட்டா இருந்ததா என்றால் பட்டா இல்லை ஏனெனில் தாவா சொத்து நத்தம் புறம்போக்கு என்பதால் பட்டா கேட்டிருந்தும் பட்டா கொடுக்கப்படவில்லை. மேற்படி சர்வே எண். 238/10 முதல் 238/16 வரை உள்ள சொத்துக்களுக்கு பட்டா கொடுக்கப்பட்ட நிலையில் சர்வே எண். 238/18 ற்கு ஏன் எனது அப்பா பெயரில் பட்டா கொடுக்கப்படவில்லை என்றால் எனது அப்பா வெளியூருக்கு வேலை நிமித்தமாக சம்பாதிக்க சென்றிருந்த போது 2007ம் வருடம் எனது சித்தப்பா தனது பெயரில் மோசடியாக பட்டா பெற்றுள்ளார். பி.வா.சா.ஆ.1ல் தாவா சொத்து காலியிடமாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தானது வாதியின் தகப்பனார் பெயருக்கு பட்டா கொடுக்கப்படுவதற்கு முன்பு அரசு

ஆவணத்தில் அரசு புறம்போக்கு நத்தம் என்றே வகைப்பாடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணமானது சர்வே எண். 238/18ல் கண்ட சொத்திற்குரியது என விவரம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கான வீட்டு வரி ரசீது ஆவணம் ஒன்று மட்டுமே பி.வா.சா.ஆ.3 ன் மூலமாக தாவா வழக்கில் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மற்ற ரசீதுகள் வீட்டில் உள்ளது. பி.வா.சா.ஆ.5 தகவல் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்டதாக சொல்லி தாக்கல் செய்யப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 6) Xerox நகல்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5ல் கண்ட 6 எண்ணிக்கையிலான வீட்டு வரி ரசீதுகளில் கட்டானிபட்டி ஊராட்சி செயலாளர் முத்திரை மட்டும் உள்ளது ஊராட்சி செயலாளரின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5ல் கண்ட வீட்டு வரி ரசீதுகள் வழக்கிற்காக நாங்கள் மோசடியாக தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 மின் கட்டண ரசீதில் தாவா சொத்து குறித்த விவரம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது அப்பாவின் அனுபவத்தில் இருந்தது என்பதை காட்டக்கூடிய ஆவணங்களாக பி.வா.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. 20.01.2001ல் 3ம் வாதி தாவா சொத்தில் இருந்த கட்டிடத்தின் பூட்டை உடைத்து வேறு பூட்டை போட்டுள்ளார் என்பதற்காக 3ம் வாதிக்கு எதிராக மதகுபட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகாரின் பெயரிலான விசாரணையில் சிவில் நீதிமன்றத்திற்கு செல்லுமாறு சொல்லி அனுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். தாவா வழக்கிற்கு பின்னிட்டு 3ம் வாதி எனக்கு எதிராக சிவகங்கை DSP அலுவலகத்தில் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் தாவா சொத்து சம்மந்தமாக அறிக்கை ஒன்றை வருவாய் துறையிடம் DSP கேட்டிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விசாரணையின் முடிவு என்ன ஆனது என்றால் தாவா சொத்து அனுபவம் எங்களிடம் இருந்ததால் சிவில் நீதிமன்றத்திற்கு செல்லுமாறு அனுப்பிவிட்டார்கள். வட்டாட்சியரிடம் இருந்து அறிக்கை பெற்று தாவா சொத்திற்கான ஆவணம் அனைத்தும் வாதிகள் பெயரில் உள்ளது என தெரிந்து கொண்டு DSP

அலுவலகத்தில் என்னை கண்டித்து அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மின் கட்டண ரசீதுகள் கீழப்பட்டியில் உள்ள கதவு எண். 3/721Aசொத்திற்கானது என்றும் தாவா சொத்திற்குரியது என பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளின் தந்தை அனுபத்தில் இருந்ததால் அவரது அனுபவத்தின் பெயரில் வாதிகளின் தந்தைக்கு அசைன்மெண்ட் பட்டா கொடுக்கப்பட்டது என்றும் அவரது இறப்பிற்கு பின்பு வாதிகள் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் 2007ம் வருடத்திற்கு பின்பு வாதிகளின் தந்தைக்கு பட்டா கொடுக்கப்பட்டது உண்மையாகும் தாவா சொத்தின் அனுபவம் எங்களிடம் தான் உள்ளது. 2007 வருடத்தில் வாதிகளின் தந்தை பெயருக்கு தாவா சொத்திற்கான பட்டா ஏற்பட்ட பிறகு அதில் உள்ள கட்டிடத்திற்கு வாதிகளின் பெயரில் தான் வீட்டு வரி ரசீது செலுத்தப்பட்டு வருகிறது என்றால் அது எனக்கு தெரியாது. 3 வருடத்திற்கு முன்பு வீட்டு வரி ரசீதுகள் நிறுத்தப்பட்டுள்ளது. 2021 ம் வருடம் தாவா வழக்கு தாக்கல் செய்ததில் இருந்து தான் வீட்டு வரி ரசீது நிறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து வாதிகளுக்கு தான் பாத்தியம் என்றும் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வீட்டு வரி ரசீதுகளும், மின் கட்டண ரசீதுகளும் வழக்கு சொத்தை பொருத்த உரிமையை எங்களுக்கு தராது என்றால் சரியல்ல. தாவா வழக்கில் எனது அப்பாவை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

R Pandy Digitally signed by R Pandy Date: 2025.08.26 17:25:41 +0530